பெருநகர சென்னை மாநகராட்சி

செ.வெ.எண். 121 நாள்: 30.08.2016

# பெருநகர சென்னை மாநகராட்சியில், அம்மா வாரச்சந்தை அமைப்பது தொடர்பாக பல்வேறு துறை அலுவலர்களுடன் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்களின் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், அம்மா வாரச்சந்தை அமைப்பது தொடர்பாக மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்களின் தலைமையில், ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் அரசின் 25 சேவைத்துறைகள், 32 மாவட்ட ஆட்சியர்கள், 45 பொதுத்துறை வங்கிகள், 27 ஏற்றுமதி நிறுவனங்களை சார்ந்த உயர்நிலை பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆலோசனைக்கூட்டம் அம்மா மாளிகையில் அண்மையில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகரில் உள்ள வடக்கு வட்டாரத்தில் ஆர்.கே. நகர் தொகுதியில் உள்ள சுண்ணாம்பு கால்வாய் பகுதி, மத்திய சென்னை வட்டாரத்தில் அசோக் நகர் 11வது அவென்யூவிலும், தெற்கு வட்டாரத்தில் பழைய மகாபலிபுரம் சாலையில் பேஷன் டெக்னாலஜி கல்லூரி மற்றும் டைடல் பார்க் இடையே பறக்கும் இரயில் பாதைக்கு கீழே, தலா ஒன்று வீதம் அம்மா வாரச்சந்தை அமைக்கப்படவுள்ளது. அம்மா வாரச்சந்தை காலை. 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை செயல்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அம்மா வாரச்சந்தை அமைப்பதற்காக நுகர்வோர், உற்பத்தியாளர், ஒருங்கிணைப்பாளரான பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியோர்களின் அனுபவங்களின் அடிப்படையில் சாதக, பாதகங்களை பரிசீலித்து பின்னர் பொதுமக்களின் வரவேற்பினை அடுத்து, அரும்பாக்கம் – பசுமை தீர்ப்பாயம் அருகில், தங்கசாலை மேம்பாலம் கீழே, வளசரவாக்கம் ஆவின் பாலகம் அருகில், சேத்துப்பட்டு பழைய தார்க்கலவை வளாகம், பொதுமக்கள் கூடும் மெரீனா கடற்கரை ஆகியற்றில் ஏதேனும் நான்கு இடங்களில் விரிவுபடுத்தப்படும்.

அம்மா வாரச்சந்தைக்கு துறை வாரியாக ஒருங்கிணைப்பு அலுவலரை நியமித்து, அவர்களின் பெயர், விலாசம், கைப்பேசி எண், மின்னஞ்சல் போன்றவற்றை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும். மேலும், விவசாயிகள்/ உற்பத்தியாளர்கள் பொருட்களை கொண்டு வரும் பொழுது, தமிழக அரசு துறைகளின் ஒருங்கிணைப்பு அலுவலர் அடையாள

அட்டை வழங்க வேண்டும். உற்பத்தியாளர் வந்தது முதல் வினியோகம் செய்து முடிக்கும் வரையிலும் உடன் இருந்து அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மாநகராட்சியின் மூலம் செய்திட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக, ஒவ்வொரு பொருளுக்கும் சம்பந்தப்பட்ட துறையின் வாயிலாக அடையாள அட்டை வழங்கும் ஒருங்கிணைப்பு அலுவலர் பெயர், துறையின் பெயர், தொலைபேசி, மின்னஞ்சல் அடங்கிய ஒரு இணையதளம் தொடங்கப்படும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் உற்பத்தி/தயாரிக்கப்படும் சிறப்பு பொருட்களை கொண்டு வர முன்னுரிமை அளித்திட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 100 சதுர அடி வீதம் கடை அமைத்து தரப்படும். மாவட்டத்தில் அனைத்து துறைகளை சார்ந்த கூட்டத்தினை கூட்டி அடுத்த வாரத்திற்கு எந்த பொருளை எவ்வளவு எடையில் கொண்டு செல்ல வேண்டும் என்பதனை அம்மா வாரச்சந்தை ஒருங்கிணைப்பாளருக்கு முன்னரே தெரிவித்திட வேண்டும். அம்மா வாரச்சந்தைக்கு வரும் 90 சதவீத பொருட்கள் வேளாண் பொருட்களாக இருப்பதால், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளரை (வேளாண்மை) மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பாளராக நியமிக்க வேண்டும். அம்மா வாரச்சந்தை தொடர்பாக பொதுமக்களும் மற்ற அலுவலகங்களும் தொடர்பு கொள்ள தனியாக ஒரு தொலைபேசி எண், மின்னஞ்சல் மற்றும் ஒரு அலுவலரை நியமித்து அதன் விவரங்களை அனைவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் விளம்பரம் செய்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசின் துறைத் தலைவர்கள் தங்களின் வழக்கமான ஆய்வுக்கூட்டத்தின்போது அம்மா வாரச்சந்தையை ஒரு தலைப்பாகக் கொண்டு எந்தெந்த பொருட்கள் எந்தெந்த மாவட்டங்களில் இருந்து என்ன கிழமையில் வருகிறது. எவ்வளவு வருகிறது என்பதை முடிவு செய்து எல்லா பொருட்களும் எல்லாக் கிழமைகளிலும் கிடைக்க செய்திட வேண்டும்.

அம்மா வாரச்சந்தைக்கு தேவையான இடம், கூடாரம், மின்சாரம், மின்விசிறி, விளக்கு, மேஜை, நாற்காலி, அலமாரி, குடிநீர், கழிவறை, வாகன நிறுத்துமிட வசதி, மருத்துவ வசதிகளும் அவசர தேவைக்கு 108 ஆம்புலன்ஸ் வசதியும், தீயணைப்புத் துறையின் வாகனம் போன்றவற்றை பெருநகர சென்னை மாநகராட்சி இலவசமாக வழங்கும்.

அம்மா வாரச்சந்தையில் பொருட்களின் விலையை தயாரிப்பாளர்/உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோரை நேரடியாக தீர்மானித்து கொள்ளவும், இடைத்தரகர்களின் தலையீடை கட்டுப்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சைவம் மற்றும் அசைவ பொருட்கள் விற்பதற்கு தனித்தனி இட ஒதுக்கீடு செய்யப்படும். அசைவ உணவு பொருட்களை தூய்மைப்படுத்த வேண்டியிருப்பதால் இறைச்சிக் கூடம் தனியாக ஏற்படுத்தப்படும். பொருட்களின் தரம், எடை போன்றவற்றை சம்மந்தப்பட்ட துறைகள் முறைப்படுத்தி

கொள்ளவேண்டும். நிறுவனங்கள்/தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு (VAT TAX) வாட் வரி செலுத்தியிருந்தால் மட்டுமே அம்மா வாரச்சந்தையில் அனுமதிக்கப்படும்.

அம்மா வாரச்சந்தையில் பெரிய அளவில் மக்கள் கூடுவதால் உணவு, குளிர்பானம், டீ மற்றும் காபி போன்றவைகளுக்கு தனியாகவும் தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலுட்ட தனி இட வசதியும் ஏற்படுத்தப்படும். பொதுமக்களின் வசதிக்காக நடமாடும் ஏ.டி.எம், நடமாடும் பயண முன்பதிவு மையம், பொதுமக்கள் எளிதில் குடும்ப அட்டை, சாதிச்சான்றிதழ், கல்வி உதவித்தொகை, கல்விக்கடன், ஆதார அட்டை முகாம், பிறப்பு இறப்பு சான்றிதழ் போன்ற வசதிகளை பெற நடமாடும் தனி மையங்களும் அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களை கவரும் வண்ணமும், மகிழ்விக்கும் விதமாகவும், கலைஞர்களின் திறமையை வெளி உலகத்திற்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு சர்வதேச அளவில் வாய்ப்பை அளிக்கும் விதமாக சம்பந்தப்பட்ட அரசு அமைப்புகள் மூலம் பாரம்பரிய நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்து சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றம் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகள் காவல் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும். அம்மா வாரச்சந்தையில் விநியோகிக்கும் பொருட்களை துறை மூலமாகவும், மாவட்டம் மூலமாகவும், வங்கிகள் மூலமாகவும், ஏற்றுமதியாளர்கள் மூலமாகவும் அனுப்ப இருப்பதால் அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஒவ்வொரு வருடத்திற்கும் ஒவ்வொரு அமைப்பிற்கும் முதல் மூன்று இடங்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம், 50 ஆயிரம், 25 ஆயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அம்மா வாரச்சந்தைக்கு பொருட்களை உற்பத்தி இடத்தில் இருந்து விற்பனை இடத்திற்கு அரசு வாகனத்தில் கொண்டு வர தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையிடம் ஒப்புதல் பெற்றுத்தர வேளாண்மைத்துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அம்மா வாரச்சந்தையில் பொருட்கள் விற்பனையாகாமல் மீதமிருந்தாலோ அல்லது தேங்கினாலோ, அதனை சம்பந்தப்பட்ட உற்பத்தியாளர்/தயாரிப்பாளர் தங்கள் பொறுப்பிலேயே அடுத்த சந்தைக்கு கொண்டு செல்ல சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் வழிக்காட்டுதல் மற்றும் ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இதன் பின்னர், தேவைக்கு ஏற்ப சேவைத் துறைகள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், வங்கியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடம் மாதம் ஒருமுறை ஆலோசித்து விதிகள் வகுக்கப்படும்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**